# மாத்தளை மாவட்ட வர்த்தக கைத்தொழில் & விவசாய சபை (MDCCIA)
# மத்திய மாகாண தொழில் முனைவோர் விருதுகள் – 2025

**விண்ணப்ப அறிவுறுத்தல்கள்**

1. தகுதியான விண்ணப்பதாரர்கள் & வகைப்பாடுகள்

தகுதியானவர்கள்:

- மத்திய மாகாணத்தில் (மாத்தளை, கண்டி, நுவரெலியா) பதிவு செய்யப்பட்டு இயங்கும் நிறுவனங்கள்.
- தொழில் வகைகள்: மைக்ரோ (நுண்), சிறு, நடுத்தரம், பெரியது.
- துறைகள்: உற்பத்தி, விவசாய / மீன்பிடி / கால்நடை / சுற்றுலா துறை (tourism)/ விருந்தினர் சேவை (Hospitality)/ சேவைகள்.
- விண்ணப்பதாரர்கள் தங்கள் வணிக வகைக்கான சட்ட மற்றும் பதிவு தேவைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- மாத்தளை மாவட்ட வர்த்தக கைத்தொழில் & விவசாய சபையின் பணிப்பாளர்களால் நடாத்தப்படும் நிறுவனங்கள் விண்ணப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

**வருடாந்த விற்பனை புரழ்வு மற்றும் ஊழியர்கள் அடிப்படையில் வகைப்பாடு:**

வருடாந்த வருமான அடிப்படையில் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வகைக்கு தகைமை பெறுவதற்கு அதற்கு தொடர்பான இரண்டு நிபந்தனைகளில் ஒரு நிபந்தனையை பூர்த்தி செய்தல் போதுமானது.

| பொருளாதார துறை | வகை | வருடாந்த விற்பனை (Rs. Mn) | ஊழியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உற்பத்திகள் | பெரிய | 751 மற்றும் அதற்கு மேல் | 200 க்கும் மேல் |
| | நடுத்தர | 351 – 750 | 51 – 200 |
| | சிறிய | 20 – 350 | 11 – 50 |
| | மைக்ரோ – நுண் | 20 க்கும் குறைவானது | 10 க்கும் குறைவானது |
| சேவைகள் | பெரிய | 751 மற்றும் அதற்கு மேல் | 200 க்கும் மேல் |
| | நடுத்தர | 351 – 750 | 51 – 200 |
| | சிறிய | 20 – 350 | 6 – 50 |
| | மைக்ரோ– நுண் | 20 க்கும் குறைவானது | 5 க்கும் குறைவானது |

**2. முக்கிய திகதிகள்**

- விண்ணப்ப முடிவு திகதி: 2025.10.15
- மாபெரும் விருது விழா: 2025.12.14

**3. விண்ணப்பத்தை எவ்வாறு நிரப்புவது**

- மூல எழுத்துக்கள் (CAPITAL LETTERS) அல்லது டிஜிட்டல் படிவத்தில் தட்டச்சு செய்யவும்.
- ஒவ்வொரு பிரிவிலும் முழுமையான மற்றும் துல்லியமான தகவலை வழங்கவும். பொருந்தாவிட்டால் 'N/A' என எழுதவும்.
- பதில் சுருக்கமாக அமைதல் வேண்டும், வார்த்தைகளின் எண்ணிக்கையை கருத்திற் கொள்ளவும்.
- வியாபார விபரம் அதிகபட்சம் 100 சொற்கள்
- CSR உங்களது நிருவனத்தினால் செயற்படுத்தப்படும் சமூகநல செயற்திட்டங்கள் அதிகபட்சம் 100 சொற்கள்.
- எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள்: அதிகபட்சம் 100 சொற்கள்

**4. விண்ணப்பத்தை வேண்டிய ஆவணங்கள் (தேவையான இடங்களில் கட்டாயம்)**

- வியாபார/ நிறுவன பதிவு சான்றிதழ். (BR)
- வியாபார சுய விவரம் – (இருப்பின்)
- விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை (NIC) பிரதி
- கடந்த நிதியாண்டுக்கான நிதி ஆவணங்கள்: கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் அல்லது சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்குகள். மைக்ரோ – நுண்வகை பிரிவிற்கு தேவையான நிதி ஆவணங்களை இருந்தால் மாத்திரம் இணைக்கவும்.
- ஏற்றுமதி சான்றிதழ்கள் (ஏற்றுமதி விற்பனைகள் பிரகடனப்படுத்தியிருப்பின்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) – இருப்பின்.
- தரச் சான்றிதழ்கள் (GAP, GMP, ISO, HACCP) – கோரப்பட்டால்.
- புதிய உற்பத்திகள்/சேவைகளுக்கான ஆதாரம் (புகைப்படங்கள், விளக்கக் கையேடுகள், விவரக் குறிப்புகள்). உபகாரம் தொடர்பான பதிவுகள்
- ஊழியர் நல ஆவணங்கள் (கொள்கைகள், புகைப்படங்கள், உபகாரம் தொடர்பான பதிவுகள்)
- CSR ஆதாரம் (புகைப்படங்கள், பயனாளி கடிதங்கள், ரசீதுகள்).
- புதுப்பிக்கத்தக்க சக்தி அல்லது சக்திக்கான திறன் ஆதாரம் (விலைப்பட்டியல், பில்கள், நிறுவல் புகைப்படங்கள்).
- விருதுகள்/அங்கீகாரங்கள் (கடந்த 3 ஆண்டுகள்).
- சமீபத்திய EPF/ETF அறிக்கைகள்.
- விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பிற ஆதார ஆவணங்கள்

**5. புகைப்பட ஆதாரம் (பரிந்துரைக்கப்படுகிறது)**

- புகைப்படங்கள்: தயாரிப்பு, உற்பத்தி நிலையம், காட்சியறை/விற்பனை நிலையம், CSR செயல்பாடு.
- ஒவ்வொரு புகைப்படத்திலும் விண்ணப்பதாரரின் பெயரும் சுருக்கமான தலைப்பும் இருக்க வேண்டும்.

**6. நிதி மற்றும் எண்கள் தொடர்பான புலங்கள்**

- தொகைகள் இலங்கை ரூபாயில் (Rs) குறிப்பிடப்பட வேண்டும்.
- மொத்த முதலீடு – மதிப்பீடு 31/03/2025 வரை.
- வருடாந்த புரழ்வு வருமானம் – கடந்த நிதியாண்டு (ஆதார ஆவணங்கள் இணைக்கவும்).

**7. ஊழியர் தகவல்**

- உரிமையாளர்களையும் (பொருந்தினால்) ஊழியர் எண்ணிக்கையில் சேர்க்கப்படலாம்.
- நிரந்தர, தற்காலிக மற்றும் மாற்றுத்திறனாளி ஊழியர்களின் துல்லியமான எண்ணிக்கையை வழங்கவும்.
- பகுதி நேர / தற்காலிக ஊழியர்களுக்கான சராசரி முழுநேர சமவிகிதங்களை (FTE) பயன்படுத்தவும்.
  உ + ம்) 10 ஊழியர்கள் அரை நாள் வேலை அடிப்படையில் வேலை செய்தால் 5 நபர்கள் முழு நாள் வேலை செய்ததாக கருதவும்.

**8. சுற்றுச்சூழல் / சக்தி / கழிவு**

- சூழல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் EPL இருந்தால் இணைக்கவும் பொருந்தாவிட்டால் 'Not Applicable' என எழுதவும்.
- சுக்தி திறன் நடவடிக்கைகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாட்டை ஆதாரங்களுடன் விவரிக்கவும்.
- வியாபாரத்தினால் வெயியேற்றப்படும் ஒவ்வொரு கழிவு வகைக்கும், அதை குறைக்கும், மீழ பயன்படுத்தும் அல்லது சூழலுக்கு சாதகமான முறையில் அகற்றும் முறைகளை விவரிக்கவும்.

## 9. விருது வகைகள்

- எண்டர்ப்பிரைஸ் எக்ஸலன்ஸ் விருது (1)
  மத்திய மாகணத்தில் மிகச் சிறந்த நிறுவனம்

- சிறந்த நிறுவன விருதுகள் (12)
  3 துறைகள் x 4 வகைகள் = 12 விருதுகள்

| பொருளாதார துறை | வகை | பொருளாதார துறை | வகை | பொருளாதார துறை | வகை |
|---|---|---|---|---|---|
| உற்பத்திகள் | பெரிய | விவசாய / மீன்பிடி/ கால்நடை | பெரிய | சுற்றுலா துறை / விருந்தினர் சேவை/ சேவைகள் | பெரிய |
| | நடுத்தர | | நடுத்தர | | நடுத்தர |
| | சிறிய | | சிறிய | | சிறிய |
| | மைக்ரோ | | மைக்ரோ | | மைக்ரோ |

- சிறந்த கருப்பொருள் விருதுகள் (6)
  - சிறந்த சுற்றுச்சூழல் நட்பு நிறுவனம்
  - சிறந்த ஏற்றுமதியாளர்
  - சிறந்த உற்பத்தி நிறுவனம்
  - சிறந்த புதிய உற்பத்தி நிறுவனம்
  - சிறந்த மதிப்பு சேர்க்கப்பட்ட நிறுவனம்
  - சிறந்த சக்தி திறன் கொண்ட நிறுவனம்

- சிறந்த மாவட்ட நிறுவன விருதுகள் (36)
  3 துறைகள் x 4 வகைகள் x 3 மாவட்டங்கள் = 36 விருதுகள்

  மாவட்டங்கள்: மாத்தளை, கண்டி, நுவரெலியா

| பொரு.துறை | வகை | பொரு. துறை | வகை | பொருளாதார துறை | வகை |
|---|---|---|---|---|---|
| உற்பத்திகள் | பெரிய | விவசாய / மீன்பிடி/ கால்நடை | பெரிய | சுற்றுலா துறை / விருந்தினர் சேவை / சேவைகள் | பெரிய |
| | நடுத்தர | | நடுத்தர | | நடுத்தர |
| | சிறிய | | சிறிய | | சிறிய |
| | மைக்ரோ | | மைக்ரோ | | மைக்ரோ |

## 10. உறுதிப்படுத்தல் மற்றும் கையொப்பம் (File Format)

- விண்ணப்பதாரர் விண்ணப்ப படிவத்தில் கையொப்பமிட்டு திகதியிடல் வேண்டும்.
- கையொப்பமிடபடாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

## 11. சமர்ப்பிக்கும் முறை மற்றும் கோப்பு வடிவம்

- விண்ணப்பம் மற்றும் இணைப்புகளை நேரடியாக சமர்ப்பிக்கவும்/ பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பவும்:
- அனுப்ப வேண்டிய முகவரி MATALE DISTRICT CHAMBER OF COMMERCE, INDUSTRY AND AGRICULTURE, 75/2/2 இராஜ வீதி, மாத்தளை
- அலுவலக நேரம்: காலை 9:00 – பிற்பகல் 4:30 (திங்கள்–வெள்ளி)

| விண்ணப்ப கட்டணம்: | வகை விண்ணப்ப கட்டணம் (LKR) |
|---|---|
| மைக்ரோ - நுண் | 1,500/- |
| சிறிய | 5,000/- |
| நடுத்தர | 7,500/- |
| பெரிய | 10,000/- |

- விண்ணப்ப கட்டணம் கீழ்க்காணும் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்:
- வங்கி: Bank of Ceylon, Matale Branch
- கணக்கு பெயர் : Matale District Chamber of Commerce, Industry and Agriculture
- கணக்கு எண் : 827 33 895

## 12. விண்ணப்ப சரிபார்ப்பு பட்டியல்

- முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்.
- விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் திகதி.
- வணிக பதிவு பத்திரம் (BR) பிரதி இணைக்கப்பட்டது.
- NIC நகல் இணைக்கப்பட்டது.
- நிதி அறிக்கைகள் இணைக்கப்பட்டது.
- EPL மற்றும் சான்றிதழ்கள் இணைக்கப்பட்டது (கோரப்பட்டால்).
- புகைப்படங்கள் மற்றும் ஆதார ஆவணங்கள் இணைக்கப்பட்டது.
- அனைத்து ஆவணங்களும் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளது.
- கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டது.
- இணையம் மூலம் (Online Payment) செலுத்தபட்டிருப்பின் Payment Slip இன் நிழட் பிரதியை இணைக்கவும்.

## 13. தேர்வு செயல்முறை மற்றும் மதிப்பிட

பிழையின்றி சரியாக பூரணப்படுத்தப்பட்ட மற்றும் குறிப்பிட்ட வகைக்கு வகைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மாத்திரமே பரிசீலீக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் இடம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மேலதிக ஆவணங்கள் அல்லது விளக்கங்களை வழங்க அழைக்கப்படலாம்.

மதிப்பீட்டு அளவுகோல்கள்:

| அளவுகோல் | புள்ளிகள் (%) |
|---|---|
| நிதி செயல்திறன் | 10 |
| வணிக நோக்கு | 10 |
| புது கண்டுபிடிப்புக்கள் / தொழில்நுட்பங்களை பயன்படுத்தல் | 15 |
| சர்வதேச & உள்ளூர் சந்தை அணுகல் | 10 |
| சந்தைப் பங்கு / விற்பனை செயல்திறன் | 10 |
| வேலைவாய்ப்பு உருவாக்கம் | 10 |
| உற்பத்தித் திறன் | 15 |
| சமூக பொறுப்பு (CSR) | 10 |
| சக்தி மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் | 10 |
| மொத்தம் | 100 |

## 14. இரகசியத்தன்மை

- வழங்கப்படும் அனைத்து தகவல்களும் விருது திட்டம் மற்றும் தொடர்புடைய பிரச்சாரத்திற்காக (விண்ணப்பதாரரின் அனுமதியுடன்) மட்டுமே பயன்படுத்தப்படும்.
- நுணுக்கமான நிதி தகவல்கள் முற்றிலும் இரகசியமாக பேணப்படும்.

## 15. தொடர்புகளுக்கு


பெயர் : Mr. Gihan Welagedara / Mr. Faizaldeen

தொலைபேசி : 070 222 4000

மின்னஞ்சல் (Email) : projects.matalechamber@gmail.com